ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2114/55 - 2019 මාර්තු මස 15 වැනි සිකුරාදා - 2019.03.15
*2114/55 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44(5) ஆம் உப உறுப்புரைக்கிணங்க என்னால் அரசியலமைப்பின் 44(1) ஆம் உப உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சருக்கான கடமைகளின் மற்றும் பணிகளின் கையளிப்பு கீழ் தரப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் செயற்படுத்தப்பட வேண்டும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

நவீன் திசாநாயக்க,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்.

*2019, மாச்சு 15.*

அட்டவணை

**கௌரவ வடிவேல் சுரேஷ், பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்**

| நிரல் I<br>கடமைகளும் பணிகளும் | நிரல் II<br>திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் | நிரல் III<br>நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
|---|---|---|
| 1. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடய தானங்களுடன் தொடர்புடைய அபிவிருத்திக் கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தல், நடைமுறைப்படுத்தல், பின்னாய்வு மேற்கொள்ளல் மற்றும் மதிப்பீடு செய்தல்.<br><br>2. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நியதிச் சட்ட நிறுவனங்களின் விடய தானங்களுக்குரிய பயிர்களின் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான பின்னூட்டல்களையும் ஏனைய வசதிகளையும் வழங்குதல்<br><br>3. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள தாளாண்மைகளின் உற்பத்தித் திறனுக்கான சர்வதேச போட்டியை மேம்படுத்தல்.<br><br>4. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள தாளாண்மைகளின் பயிர்களின் அடிப்படையிலான கூட்டப்பட்ட பெறுமதிகள் தொடர்பான கைத்தொழில்களை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல்.<br><br>5. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள தாளாண்மைகளுக்கு உரிய உத்தரவுப் பத்திரங்களை விநியோகித்தல்.<br><br>6. பல்லினப் பயிர்ச்செய்கை மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட விவசாயப் பண்ணை முறையூடாக II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள தாளாண்மைகளுக்குரிய காணிகளை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்வதும் அதனூடாக உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பை அதிகரிக்கச் செய்தலும்.<br><br>7. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள தாளாண்மைகளுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளை அறிமுகஞ்செய்தல்.<br><br>8. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ள அனைத்து அபிவிருத்தி விடயங்களுக்குரிய நடவடிக்கைகள்<br><br>9. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களை மேற்பார்வை செய்தல். | 1. தென்னை அபிவிருத்தி அதிகார சபை<br><br>2. வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி<br><br>3. கல்லோயா பெருந்தோட்டக் (தனியார்) கம்பனி<br><br>4. வரையறுக்கப்பட்ட எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி | • வேறொர் அமைச்சரின் விடய தானத்திற்கு குறிப்பாக கையளிக்கப் படாத I ஆம் மற்றும் II ஆம் நிரல்களில் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புடைய அனைத்து நியதிச் சட்டங்களும். |

3- 1410